This step garden located in Ooty, has fragrant tea planted on every elevation, and also houses a tea factory as well as a tea museum in it. Apart from the majestic views of the valley seeping in through your eyes, you can get a cup of freshly prepared tea to sip at the factory.

உதகை மலை அடுக்குகளில் அமைந்துள்ள தேயிலை தோட்டங்களில், தேயிலை தொழிற்சாலை மற்றும் தேயிலை அருங்காட்சியகம் அமைந்துள்ளன. எழில் கொஞ்சும் பள்ளத்தாக்குகள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. தேயிலை தொழிற்சாலைகளிலிருந்து புத்துணர்ச்சி அளிக்கும் தேநீர் வழங்கப்படுகிறது.

SIMS PARK

Home to a 1000 species of colorful and vibrant flowers, it is known for its fruits and vegetable show, which has been successfully organized by the Department of Horticulture for the past 53 years in continuation.

தோட்டக்கலை துறையின் மூலம் 53 வருடங்களாக நடத்தப்பட்டு வரும் பழம் மற்றும் காய்கறி கண்காட்சி, மனதை மயக்கும் 1000 க்கும் மேற்பட்ட வண்ணமயமான பூக்களை கொண்டு அமைக்கப்படுகிறது.

GUINDY NATIONAL PARK

The Guindy national park is one of the very few national parks situated inside a city.The park is home to 400 blackbucks, 2,000 spotted deer, 24 jackals, and a wealth of different birds, mammals, reptiles as well as intvertebrates.

நகரத்திற்குள் அமைந்துள்ள மிக சில தேசிய பூங்காக்களில் கிண்டி தேசிய பூங்காவும் ஒன்றாகும். இப்பூங்காவில் 400 புல்வாய் மான்கள், 2,000 புள்ளிமான்கள், 24 நரிகள், பல்வேறு வகையான பறவைகள், பாலூட்டிகள், ஊர்வன மற்றும் முதுகெலும்பில்லா உயிரினங்கள் உள்ளன.

ROSE GARDEN

Containing more than twenty thousand varieties of roses, the Rose Garden is one of the most beautiful garden in the country. It belongs to an elite club of 35 rose gardens around the world which has won the Garden of Excellence award for South Asia.

நாட்டின் மிக அழகிய பூங்காக்களுள் ஒன்றாக ரோஜா பூங்கா விளங்குகிறது. இங்கு 20,000 க்கும் மேற்பட்ட கண்கவர் ரோஜா வகைகள் உள்ளன. இப்பூங்கா தெற்காசியாவில் சிறந்த பூங்காவிற்கான விருதை பெற்றுள்ளது. மேலும், உலகெங்கிலும் உள்ள 35 ரோஜா பூங்கா அங்கத்தினராக உள்ள Elite Club-ல் சேர்ந்துள்ளது.

SEMMOZHI POONGA

Semmozhi Poonga is one of the most visited botanical gardens in all of Chennai. The beautiful landscaping at the garden has not only made it a delight for the daily morning walkers but has also attracted film makers and tourists.

அழகான நிலப்பரப்பு மற்றும் பல்வேறு வகையான தாவரங்களுடன் சென்னையில் அமைந்துள்ள செம்மொழி பூங்கா அதிக அளவில் பார்வையிடப்படும் தாவரவியல் பூங்காவாகும். காலை நடைபயிற்சி செய்பவர்கள் மட்டுமல்லாமல், திரைபட துறையினர் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் இங்கு வருகை புரிகின்றனர்.

ADYAR POONGA

The park was created as a part of the eco restoration of the adyar estuary.The park's ecosystem consists of tropical dense evergreen forest, comprising of trees and shrubs that have thick dark green foliage throughout the year, with over 160 wood species with pelicans and numerous other birds as visitors.

இப்பூங்கா அடையார் நதி முகத்துவார சுற்றுச்சூழல் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாகும். இப்பூங்காவின் சுற்றுச்சூழல் அமைப்பு, 160 வகையான பசுமை காடுவகை மரங்களை கொண்டுள்ளதால் பல்வேறு வகை பறவைகள் அதிக அளவில் இங்கு வருகை புரிகின்றன.

VEDANTHANGAL SANCTUARY

Vedanthangal Bird Sanctuary is the oldest bird sanctuary in the country. It is a 30-hectare sanctuary, with more than 40,000 birds (including 26 rare species), from various parts of the world visit it during the migratory season every year. It has been designated as a protected Ramsar site since 2022.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் இந்தியாவின் மிக பழமையான பறவைகள் சரணாலயங்களுள் ஒன்றாகும். இச்சரணாலயம் 30 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு 40,000 க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் (26 அரிய வகை இனங்கள் உட்பட) உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து புலம்பெயர் பருவத்தில் ஒவ்வொரு ஆண்டும் வருகை புரிகின்றன. இச்சரணாலயம் 2022 முதல் பாதுகாக்கப்பட்ட ராம்சார் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

STORIES OF CHARMING LOCALES

AUROVILLE

Auroville is an experimental township in Viluppuram district, Tamil Nadu. Mirra Alfassa, who founded Auroville in 1968 says, “Auroville strives to be a universal town where men and women of all countries are able to live in peace and progressive harmony”.

ஆரோவில், தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஓர் நகரமாகும். 1968 ஆம் ஆண்டு ஆரோவில்லை நிறுவிய மிர்ரா அல்பாஸா அவர்கள் "ஆரோவில் அனைத்து நாடுகளிலும் உள்ள ஆண்களும் பெண்களும் அமைதியாகவும் முற்போக்கான நல்லிணக்கத்துடனும் வாழக்கூடிய ஒரு உலகளாவிய நகரமாக திகழ விரும்பினார்".

KASIMEDU

The only fishing harbour in Chennai constructed in 1975, where business happens like clockwork despite all odds. This eccentric ecosystem is visited by 30,000 people at the wholesale auction with sales amounting upto 200 tonnes of sea food every single day.

1975 ஆம் ஆண்டு சென்னையில் கட்டப்பட்ட ஒரே மீன்பிடித் துறைமுகம், இங்கு 24 மணி நேரமும் நடைபெறும் வணிகத்தில் 200 டன் மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு நாளொன்றுக்கு 30,000 பேர் வருகை புரிகின்றனர்.

MEGHAMALAI

Meghamalai commonly known as the High Wavy Mountains, is a mountain range located in the Western Ghats in the Theni district near Kumily, Tamil Nadu. The mountain range is 1,500 metres above sea level, and it is rich in flora and fauna.

தமிழ்நாட்டில் குமுளிக்கு அருகில் தேனி மாவட்டத்தில் மேற்குதொடர்ச்சி மலையில் மேகமலை உள்ளது. இவ்விடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் உள்ளது. இங்கு ஏராளமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப்படுகின்றன.

GINGEE FORT

Originally built by Ananta Kon of the Konar dynasty around 1190 AD and later fortified by Krishna Konar, the gingee fort is a massive fort complex in Villuppuram. The Maratha King, Chhatrapati Shivaji called it the “most impregnable fortress in India”.

கோனார் வம்சத்தின் அனந்த கோன் என்பவரால் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய கோட்டை வளாகமான செஞ்சிக் கோட்டை கி.பி 1190ம் ஆண்டு கட்டப்பட்டது. பின்னர், இக்கோட்டை கிருஷ்ண கோனாரால் பலப்படுத்தப்பட்டது. மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி இக்கோட்டையை "இந்தியாவின் மிகவும் அசைக்க முடியாத கோட்டை" என்று வர்ணித்துள்ளார்.

TOP SLIP

Topslip is located near Pollachi in the state of Tamil Nadu, India, at an altitude of 800 feet from the sea level on the Anamalai mountain range. It is a part of the protected Indira Gandhi Wildlife Sanctuary and one of the highlights is the Kozhikamuthi Elephant camp.

கடல் மட்டத்திலிருந்து 800 அடி உயரத்தில் பொள்ளாச்சிக்கு அருகில் ஆனைமலை மலைத்தொடர்களில் டாப்சிலிப் அமைந்துள்ளது. இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள கோழிகமுத்தி யானைகள் முகாம் சிறப்பு வாய்ந்தது.

NAGORE DURGAH

This revered Dargah is established over 5 acres in Nagore, is built over the tomb of the Sufi saint Shahul Hameed. The tomb can be approached through 7 thresholds, 3 of them made of gold and 4 made of silver.

சூஃபி ஷாகுல் ஹமீதின் கல்லறையின் மீது நாகூர் புனித தர்கா 5 ஏக்கர் நில பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. தர்காவிற்கு 7 வாயில்கள் உள்ளன. அவற்றில் 3 வாயில்கள் தங்கத்தாலும் 4 வாயில்கள் வெள்ளியாலும் அமைக்கப்பட்டுள்ளன.

CHETTINAD

The palatial houses of the Karaikudi region were built in the 19th century and are known for their large courtyards. This courtyard is from a house in Kaanadukathan, a small village in Chettinad.

19 ஆம் நூற்றாண்டில் காரைக்குடியில் கட்டப்பட்ட அரண்மனை வீடுகள் பெரிய முற்றங்களை கொண்டுள்ளன. இவ்வரண்மனை வீடுகள் செட்டிநாட்டில், கானாடுகாத்தான் கிராமத்தில் உள்ளன.

VELANKANNI

Known as the “Lourdes of the East” the Velakanni church located in Nagapattinam is one of the most revered pilgrim centres for the Catholics in India. It is one of the most visited Roman Catholic Latin Rite shrines, with over 20 million pilgrims visiting it every year.

கத்தோலிக்கர்களின் புனித யாத்திரை தலங்களுள் ஒன்றான, கிழக்கின் லூர்து என்று அழைக்கப்படும் வேளாங்கண்ணி தேவாலயம் நாகப்பட்டினத்தில் உள்ளது. இத்தலத்திற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் 20 மில்லியன் ரோமன் கத்தோலிக்க யாத்ரிகர்கள் வருகை புரிகின்றனர்.

AVALANCHE LAKE

Avalanche Lake is an important tourism destination in the Nilgiris district. The lake is surrounded by a rolling landscape with blooming flowers like magnolias, orchids and rhododendrons. People visiting the lake can also engage themselves in trout fishing.

பூத்துகுலுங்கும் பல்வேறு வகையான மலர்களை கொண்ட நிலப்பரப்பால் சூழப்பட்ட அவலாஞ்சி, நீலகிரி மாவட்டத்தின் ஒரு முக்கிய சுற்றுலா தலமாகும். இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கிற்காக தூண்டில் மூலம் மீன் பிடித்தலில் ஈடுபடுவார்கள்

STORIES OF EXHILARATING ADVENTURES

KITE SURFING

Tamil Nadu's strong winds make it an ideal location for sports like Kite Surfing. The winds that prevail over Thoothukudi and Manapad's shores have created a kite surfing community in the region.

தமிழ்நாட்டில் பல்வேறு தலங்களில் காற்றின் வேகம் அதிகமாக உள்ளதால் கைட் சர்ஃபிங் போன்ற சாகச விளையாட்டுகளுக்கு உகந்த இடமாக திகழ்கிறது. மேலும், தூத்துக்குடி மற்றும் மணப்பாடு கடற்கரையில் கைட் சர்ஃபிங் செய்வதற்கு சிறந்த தலமாக விளங்குகிறது.

MOUNTAIN BIKING

Off-road bicycling, over rough and rocky terrain on a mountain bike can be the perfect fix for those who seek that rush of adrenaline. Tamil Nadu has a number of popular mountain biking trails through Masinagudi, Ooty, Coonoor, Kodaikanal etc.

மலைபாதைகளில் செல்லும் சைக்கிள் பயணம் மன அழுத்தத்தை குறைப்பதுடன் கரடுமுரடான மற்றும் பாறை நிலப்பரப்பில் மலை பைக்கிங் செய்வது, மன அழுத்த ஹார்மோன்களின் இயக்கத்தை சீராக்குகிறது. தமிழ்நாட்டில் பிரபலமான மலை பைக்கிங் பாதைகள் மசினகுடி, ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் அமைந்துள்ளன.

KAYAKING

Kayaking can qualify as both a competitive sport and also a recreational activity. Still, calm and relatively shallow waters are ideal for kayaking, which one can attempt at Muttukadu (Chennai), Rameshwaram, Thirumoorthy Dam, and so on.

கயாக்கிங், பொழுதுபோக்கிற்காகவும், போட்டி விளையாட்டாகவும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முட்டுக்காடு, இராமேஸ்வரம், திருமூர்த்தி அணை மற்றும் ஆரவாரமற்ற, ஆழமற்ற நீர் நிலைகள் கயாக்கிங் செய்வதற்கு உகந்த இடங்களாகும்.

SAILING

The Royal Madras Yacht Club founded way back in 1911 laid the foundation for sailing as a sport in Tamil Nadu. Most recently, four sailors, represented by the Tamil Nadu Sailing Association went on to represent India at the 2020/2021 Olympics in Tokyo. One can attempt sailing in Chennai and Rameswaram.

ராயல் மெட்ராஸ் யாட்ச் கிளப் தமிழ்நாட்டில் 1911 ஆம் ஆண்டு பாய்மர படகு பயணம் செய்வதற்கான அடித்தளத்தை அமைத்தது. 2021-ல் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாடு படகோட்டம் சங்கம் (Tamil Nadu Sailing Association) மூலம் நான்கு படகோட்டிகள் கலந்து கொண்டனர். பாய்மர படகு பயணம் செய்வதற்கு சென்னை மற்றும் இராமேஸ்வரம் உகந்த தலங்களாக உள்ளது.

PARAMOTORING

Paramotoring is considered the most simple form of aviation that doesn't require a licence. One can attempt the sport in the ECR area in Chennai, after undertaking a pilot training programme.

பாராமோட்டரிங் என்பது மிக எளிமையான வானூர்தி பயணமாகக் கருதப்படுகிறது. இதற்கு தனியே உரிமம் ஏதும் பெற தேவையில்லை. கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் இச்சாகச விளையாட்டினை பயிற்சி பெற்ற பின் முயற்சிக்கலாம்.

SCUBA DIVING

Scuba diving and snorkelling is the best way to explore the under-water sea life, which one can attempt in Rameshwaram, and Chennai. One can find a large variety of indigenous fish, molluscs, sea turtles and marine mammals like dugongs and dolphins.

கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்களை அறிந்து கொள்ள "Scuba diving" and "Snorkelling" ஏதுவாக அமைகிறது. சென்னை மற்றும் இராமேஸ்வரம் இச்செயல்களுக்கு உகந்த இடமாகும். இந்நிகழ்வின்போது கடல்வாழ் உயிரினங்களான கடலாமைகள், டால்பின்கள், கடல் பசுக்கள் மற்றும் பல்வேறு கடல்வாழ் உயிரினங்களை காணலாம்.

STAND UP PADDLING

Standup Paddling is a sort of mix between surfing and kayaking - where paddleboarders stand on boards over flat waters, and use a paddle to propel themselves. One can attempt SUP at Rameshwaram, Chidambaram and Chennai.

“Standup Paddling” என்பது அலைச்சறுக்கு மற்றும் கயாக்கிங்க்கும் இடைப்பட்ட ஒரு வகை நீர்விளையாட்டாகும். இவ்விளையாட்டில், வீரர்கள் பலகைகளில் நின்று, துடுப்பைப் பயன்படுத்தி நீரில் முன்னேறுகின்றனர். சென்னை, இராமேஸ்வரம் மற்றும் சிதம்பரம் ஆகிய தலங்கள் இவ்விளையாட்டிற்கான உகந்த இடமாக உள்ளன.

SURFING

The coast of Kovalam, a small fishing village, is the new surfing destination of India. The weather and the waves go hand in hand, making it the best place for the young and old to learn to ride the waves.

அலைச்சறுக்கு விளையாட்டுக்கள் இந்தியாவின் கோவளம் கடற்கரையில் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. இங்கு வானிலையும், கடல் அலைகளும் ஒருமித்து இணக்கமான சூழலில் அமையபெற்றதால், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் அலைசறுக்கு விளையாட்டுக்களை கற்றுக்கொள்ள சிறந்த இடமாக திகழ்கின்றது.

PARAGLIDING

Paragliding is an adventure sport that can be attempted at places located at higher altitudes. Fliers can paraglide solo, or tandem, with a trained paraglider to guide them. One can attempt paragliding in Yelagiri, Yercaud and Kodaikanal.

சாகச விளையாட்டுகளுள் ஒன்றான பாரா கிளைடிங் மலை பகுதிகளில் நிகழ்த்தப்படுகிறது. பயிற்சி பெற்ற பாராகிளைடர் உதவியுடன் அல்லது தனியாகவும் பாரா கிளைடிங் மேற்கொள்ளலாம். ஏலகிரி, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் இந்நிகழ்விற்கு ஏற்ற இடங்களாகும்.

STORIES OF EXCEPTIONAL EDUCATION

ANNA UNIVERSITY

Anna University is the largest technological university in the world with over 7.5 lakhs students. It offers higher education in Engineering, Technology, Architecture and Applied Sciences relevant to the current and projected needs of the society.

அண்ணா பல்கலைக்கழகம் 7.5 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டு உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக விளங்குகிறது. இப்பல்கலைகழகத்தால் வழங்கப்படும் உயர்கல்விகளான பொறியியல், தொழில்நுட்பம், கட்டடக்கலை மற்றும் பயன்பாட்டு அறிவியல் ஆகியவை சமூகத்தின் எதிர்கால திட்டமிடலை பூர்த்திசெய்கின்றன.

INDIAN INSTITUTE OF TECHNOLOGY, CHENNAI

It is recognized as an Institute of National Importance and has been consistently rated as one of India's most prestigious universities. IIT Founded in 1959, Madras is ranked the No.1 institute in India by the Ministry of Education.

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகம் 1959-ல் நிறுவப்பட்டது. இக்கழகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வியியல் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக விளங்குகிறது. மேலும், மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் இந்தியாவின் முதன்மை நிறுவனமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

MADRAS MEDICAL COLLEGE

Established on 2 February 1835, it is the second oldest medical college in India. The college holds clinical, pre clinical, para clinical as well as numerous super speciality departments. It recieves numerous out patients, giving exposure to rare cases.

இந்தியாவின் இரண்டாவது பழமையான மருத்துவ கல்லூரி 1835 பிப்ரவரி 2-ல் நிறுவப்பட்டது. இக்கல்லூரியில் பல்வேறு மருத்துவ பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவ துறைகள் உள்ளதால் ஏராளமான புறநோயாளிகள் அரியவகையான நோய்களுக்கு சிகிச்சை பெற வருகின்றனர்.

NATIONAL INSTITUTE OF TECHNOLOGY

Founded as Regional Engineering College Tiruchirappalli in 1964 by the Governments of India and Tamil Nadu the institute offers 10 bachelor's, 40 master's and 17 doctoral programmes and awards more than 1900 degrees annually.

1964 ஆம் ஆண்டு இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகளால் திருச்சிராப்பள்ளி மண்டல பொறியியல் கல்லூரியாக நிறுவப்பட்ட இக்கல்லூரி, 10 இளங்கலை, 40 முதுகலை மற்றும் 17 முனைவர் பட்டப்படிப்புகளை வழங்குவதுடன், ஆண்டுதோறும் 1900 நபர்களுக்கு பட்டங்களை வழங்குகிறது.



MADRAS UNIVERSITY

The University of Madras is a public state university in Chennai, Tamil Nadu, India. Established in 1857, it is one of the oldest and among the most prestigious universities in India. It offers more than 230 courses under 87 academic departments.

இந்தியாவின், தமிழ்நாட்டில் சென்னை பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது இந்தியாவின் பழமையான மற்றும் மிகவும் சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகங்களுல் ஒன்றாகும். இங்கு 87 துறைகளும் 230க்கும் மேற்பட்ட படிப்பு பிரிவுகளும் உள்ளன.

ANNAMALAI UNIVERSITY

The 1,500-acre sprawling campus offers courses of higher education in arts, science, engineering, medical, management, humanities, agriculture, and physical education. The university also provides more than 500 courses through distance education. This university was established in 1929 and is one of the oldest universities in India.

இப்பல்கலைக்கழகத்தின் 1,500 ஏக்கர் பரந்த வளாகத்தில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், மேலாண்மை, மனிதநேயம், விவசாயம் மற்றும் உடற்கல்வி போன்ற உயர்கல்வி படிப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், தொலைதூரக் கல்வி மூலம் 500 க்கும் மேற்பட்ட பட்டபடிப்புகளை வழங்குகிறது. 1929 இல் நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம், இந்தியாவின் பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும்.

TAMIL NADU NATIONAL LAW UNIVERSITY

The university was founded in 2013, with the aim to provide legal education at a global level. It was established to advance and disseminate learning and knowledge of law and legal processes and their role in national development.

தேசிய வளர்ச்சியின் பங்களிப்பில், சட்டம் மற்றும் சட்ட செயல்முறைகளில் கற்றல் மற்றும் அறிவுதிறனை மேம்படுத்துவதற்கு உலக அளவில் சட்டக் கல்வியை வழங்கும் நோக்கத்துடன் இப்பல்கலைக்கழகம் 2013 இல் நிறுவப்பட்டது.

TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY

This university in Coimbatore has its genesis from establishment of an agricultural school at Chennai, Tamil Nadu, India, as early as 1868. The university has research programs at more than 32 stations with more than 1200 scientists and teaching faculty.

1868 ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட ஒரு விவசாய பள்ளி, கோயம்புத்தூரில் ஒரு பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. இப்பல்கலைக்கழகம் 32 க்கும் மேற்பட்ட இடங்களில் 1200 விஞ்ஞானிகள் மற்றும் ஆசிரியர்களுடன் ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துகிறது.

INSTITUTE OF HOTEL MANAGEMENT

Established in 1963, it is known for its excellence both nationally and internationally in the field of Hotel Management education. It is sponsored by the Govt of Tamil Nadu & India at national/international levels and is one of the most pioneering institutes.

உணவக மேலாண்மை கல்வித் துறையில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் இந்நிறுவனம் 1963 இல் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு மற்றும் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் தேசிய / சர்வதேச அளவில் செயல்படும் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது.

STORIES OF ECONOMIC POWER HOUSES

AGRICULTURE

Agriculture remains one of the largest and most traditional contributors to the economy of Tamil Nadu. Climatic conditions and natural resources unite to create ideal conditions for practising agriculture. The Indian chamber of food and agriculture has conferred 'global agriculture award' on Tamil Nadu for its excellence in agriculture.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரம்பரிய விவசாயம் மிகப்பெரிய அளவில் பங்களிக்கிறது. இங்குள்ள தட்பவெப்ப நிலையும், இயற்கை வளமும் விவசாயம் செய்வதற்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. வேளாண் துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டிற்கு இந்திய உணவு மற்றும் வேளாண்மைச் சங்கம் 'உலகளாவிய வேளாண்மை விருதை' வழங்கியுள்ளது.

POULTRY

Tamil Nadu has the largest poultry industry in the country. This is owed to the large and consistent demand for egg and chicken in the state, and also in the neighbouring states of Kerala, Karnataka, and AP. It also exports the largest share of poultry from India.

நாட்டிலேயே மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டின் கோழிப்பண்ணை தொழில் அமைந்துள்ளது. இத்தொழில், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் மாநிலத்தில் கோழி மற்றும் கோழிகுஞ்சுகளுக்கான தேவைகளை பெரிய அளவில் விநியோகிப்பதற்கும்

DAIRY

Synonymous with Dairy and Tamil Nadu is the name 'Aavin' - a state government cooperative. The state has a very vibrant milk cooperative sector with multiple milk producers' cooperative societies spread across the state.

தமிழ்நாடு அரசின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் - ஆவின் என்று அழைக்கப்படுகிறது. பல்வேறு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இம்மாநிலம் துடிப்பான பால் கூட்டுறவு துறையை கொண்டுள்ளது.

FISHERIES

The coastline and the many other inland water bodies in the state are the natural resources that form the foundation of the fishing industry. Not only is the state a major producer of fish, the industry is a primary source of employment along the coast.

மாநிலத்தின் நீண்ட கடற்கரை மற்றும் நீர்நிலைகள் மீன்பிடி தொழிலுக்கு இயற்கையான வளங்களாக அமைந்துள்ளன. இத்தொழில் கடலோர வாழ் மக்களுக்கு ஏராளமான தொழில் வாய்ப்புகளை வழங்குவதுடன், மாநிலத்தின் மீன் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

MINING

As per the Indian Minerals Yearbook 2012, Tamil Nadu is the leading holder of the country's resources of vermiculite, magnetite, dunite, rutile, garnet, molybdenum and ilmenite. Further, the Cauvery Basin is an important site for oil and gas explorations.

நாட்டின் முக்கிய கனிம வளங்களான வெர்மிகுலைட், மக்னெட்டை, டுனைட், ருடைல், கார்னெட், மாலிப்டினம் மற்றும் இல்மெனைட் போன்ற கனிமங்கள் தமிழ்நாட்டில் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக 2012ன் இந்திய கனிமவளங்கள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், காவிரிப்படுகை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவிற்கான முக்கிய இடமாக அமைந்துள்ளது.

PHARMA & BIOTECH

Tamil Nadu was the first state in the country to set up a pharma park, in 1978. Tamil Nadu is a major exporter of surgical products, medical devices, ayush & herbal products, bulk drugs and bulk drug intermediaries and medical textiiles.

1978-ல் தமிழ்நாடு முதல் மருத்துவ பொருட்களுக்கான பூங்காவை உருவாக்கியது. அறுவை சிகிச்சை பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், ஆயுஷ் & ஆயுர்வேத பொருட்கள், மொத்த மருந்துகள், மருத்துவ இடைநிலைப்பொருட்கள், மற்றும் மருத்துவ ஆடைகள் ஆகியவற்றை தமிழ்நாடு பெரியளவில் ஏற்றுமதி செய்கிறது.



IT/ITeS

Tamil Nadu is one of the largest exporters of software being an important centre for multinational software companies. Consistent efforts are made by the Government to create policies and provisions that promote innovation and generate opportunities.Chennai has earned the status of SAAS capital of the country.

அதிகளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் சர்வதேச மென்பொருள் நிறுவனங்களின் தலைமையகமாகவும் தமிழ்நாடு உள்ளது. புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், வாய்ப்புகளை உருவாக்குவதற்காக பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுக்க வழிவகைகள் மற்றும் கொள்கை முடிவுகள் அரசால் எடுக்கப்பட்டதனால் இந்தியாவின் மென்பொருள் தலைநகர் என்ற அந்தஸ்தை சென்னை பெற்றுள்ளது.

MSME'S & COTTAGE INDUSTRIES

The largest number of Micro, Small and Medium Enterprises (15.07 %) in the country are in Tamil Nadu. Many cottage industries are a form of employment in rural TN. Production happens on a very small scale, often in homes itself.

நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் அதிகளவிலான எண்ணிக்கை (15.07%) தமிழ்நாட்டில் உள்ளன. வேலைவாய்ப்பு அளிப்பதில் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள பல்வேறு குடிசைத் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வீடுகளில் சிறிய அளவில் செயல்படும் உற்பத்தி மையங்கள் அமைந்துள்ளன.

FILM INDUSTRY

One of our largest and most popular exports are our films. The Tamil cinema industry, or Kollywood (Kodambakkam + Hollywood) is the second largest film industry in India. Tamil-language films have enjoyed and continue to enjoy worldwide appeal.

தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்று திரைப்படங்கள். தமிழ் சினிமா துறை (அல்லது) கோலிவுட் இந்தியாவின் இரண்டாவது பெரிய திரைப்படத் துறையாகும். தமிழ் மொழித் திரைப்படங்கள் உலகளவில் ரசிக்கப்படுவது மட்டுமின்றி, தொடர்ந்து ஆதரிக்கப்பட்டு வருகின்றன.

STORIES OF JOYFUL REJUVENATION

ROYAL MADRAS YACHT CLUB

The RMYC was founded by Sir Francis Spring in 1911. It was the first sailing club in southern India and was granted royal patronage by George V. It became one of the most prestigious sporting and social clubs in India.

ராயல் மெட்ராஸ் படகு கிளப் (RMYC) 1911 இல் திரு.சர் பிரான்சிஸ் ஸ்பிரிங் என்பவரால் நிறுவப்பட்டது. ஐந்தாம் ஜார்ஜ் அவர்களால் அரசின் ஆதரவைப் பெற்ற தென்னிந்தியாவின் முதல் படகு சாகச கிளப் ஆகும். மேலும் இது இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க விளையாட்டு மற்றும் சமூக கிளப்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது.

YOGA

In yoga, the mind is disciplined through meditation and the body is aligned and strengthened. Various specific yoga retreats are found in Auroville, as well as the Nilgiris.

யோகா மற்றும் தியானத்தின் மூலம் மனம் ஒழுங்குபடுத்தப்பட்டு, உடல் சீரமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுகிறது. பல்வேறு வகை யோகாவின் தாக்கம் ஆரோவில் மற்றும் நீலகிரியில் காணப்படுகின்றன.

NIGHT LIFE

Night clubs, concerts, stand up shows are spread around the metro cities in Tamil Nadu, especially in Chennai and Coimbatore. A great way to spend an evening until midnight, these cities are rated as the safest cities in the country,

தமிழ்நாட்டில் மெட்ரோ நகரங்களான சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இரவு கேளிக்கை விடுதிகள், கச்சேரிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் அதிக அளவில் நடைபெறுகின்றன. இந்நகரங்கள் நள்ளிரவு கேளிக்கைகள் பொழுது போக்குகளுக்கான இடமாகவும் நாட்டின் பாதுகாப்பான நகரங்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன.



COIMBATORE GOLF CLUB

The club was formed by few enthusiasts in Coimbatore in 1977, who till then used to drive up to the Golf courses in Ooty, Coonoor and Kodaikanal. An 18 hole golf course, it is a popular venue for major golf tournaments held in India.

கோயம்புத்தூரில் 1977-ல் கோல்ஃப் கிளப் சில ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டது. இதற்கு முன் ஊட்டி, குன்னூர் மற்றும் கொடைக்கானலில் உள்ள கோல்ஃப் மைதானங்களில் கோல்ஃப் விளையாடப்பட்டது. இவ்விடங்களில் உள்ள 18 குழிகள் கொண்ட கோல்ஃப் மைதானம், இந்தியாவில் நடைபெறும் முக்கிய கோல்ஃப் போட்டிகளுக்கான பிரபலமான இடமாகும்.

MADRAS CLUB

Madras Club or Adyar Club, is a gentleman's club in the city of Chennai, India. Founded in 1832, it is the second oldest of its kind in India. The Express Estate, which now houses the Express Avenue shopping mall, was till 1947, the original home of the Madras Club.

சென்னையில் அமைந்துள்ள மெட்ராஸ் கிளப் அல்லது அடையார் கிளப் இந்தியாவில் புகழ்பெற்றது. 1832-ல் நிறுவப்பட்ட இக்கேளிக்கை விடுதி இந்தியாவில் இரண்டாவது மிகப்பழமையானதாக கருதப்படுகிறது. 1947 ஆம் ஆண்டு வரை மெட்ராஸ் கிளப் செயல்பட்ட இடம் தற்போது எக்ஸ்பிரஸ் எஸ்டேட் ஆகும். தற்போது இவ்விடத்தில் எக்ஸ்பிரஸ் அவென்யூ ஷாப்பிங் மால் செயல்பட்டு வருகிறது.

MADRAS RACE CLUB

The Guindy Race Course was set up in 1777 in Chennai, India. It is the oldest race course in India and was officially constituted as The Madras Race Club in 1837, The club now has about 625 horses in station, three stands and boasts of the best race track in the country.

சென்னையில் உள்ள கிண்டி ரேஸ் கோர்ஸ் 1777-ல் அமைக்கப்பட்டது. இது இந்தியாவின் மிகப் பழமையான குதிரை பந்தய மைதானமாகும். 1837 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக மெட்ராஸ் ரேஸ் கிளப் என பெயர் மாற்றப்பட்டது. இந்த கிளப்பில் இப்போது சுமார் 625 குதிரைகள் மற்றும் மூன்று பார்வையாளர் மாடங்கள் உள்ளது. இது நாட்டின் சிறந்த குதிரை பந்தய பாதை என்ற பெருமையையும் பெற்றுள்ளது.

WELLNESS RESORTS

Holistic wellness resorts and retreats are spread around Tamil Nadu, all over the east coast as well as in cities like Coimbatore and Thanjavur. They offer panchakarma, yoga, solitude, rejuvenation, ayurvedic diets and so much more.

ஒருங்கிணைந்த ஆரோக்கிய விடுதிகள் தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரை, கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் போன்ற நகரங்களில் உள்ளன. அவ்விடுதிகளில் பஞ்சகர்மா, யோகா, புத்துணர்ச்சி, ஆயுர்வேத உணவுகள் மற்றும் பலவற்றை வழங்குகிறார்கள்.

MADRAS CRICKET CLUB

The club, founded in 1846, has now crossed 175 years of existence. From its earlier days the club has set an example by conducting matches with smooth efficiency. It continues to conduct a prestigious all-Indian Hockey tournament which is over a hundred years old.

1846 இல் நிறுவப்பட்ட கழகம், தற்போது 175 ஆண்டுகளைக் கடந்துள்ளது. கழகம் அதன் முந்தைய நாட்களில் இருந்து, சுமூகமான செயல்திறனுடன் போட்டிகளை நடத்தி ஒரு முன்மாதிரியாக உள்ளது. நூறு ஆண்டுகளுக்கும் மேலான ஒரு மதிப்புமிக்க அகில இந்திய ஹாக்கி விளையாட்டு போட்டியை இது தொடர்ந்து நடத்தி வருகிறது.

KODAIKANAL GOLF CLUB

Kodaikanal Golf Club is a private membership club with an 18-hole, par 71 Golf course. This club is notable for its age and the wildlife frequently seen on the course and was established on 17 June 1895 by twelve British golfers.

கொடைக்கானலில் உள்ள கோல்ஃப் கிளப் ஆனது 18 குதிரை, par 71 கொண்ட கோல்ஃப் மைதானம் கொண்ட ஒரு தனியார் உறுப்பினர் கிளப்பாகும். இந்த கிளப் மிகப்பழமை வாய்ந்தது மட்டுமின்றி இயற்கை அழகுடன் வனவிலங்குகளை மிக அருகில் பார்த்து ரசிக்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது. மேலும் இந்த கோல்ஃப் கிளப் ஆனது 17 ஜூன் 1895 அன்று பன்னிரண்டு பிரிட்டிஷ் கோல்ப் வீரர்களால் நிறுவப்பட்டது.

DETOX AND REJUVENATION

Our traditional detox and rejuvenation therapies involves herbs, supplements, purges, enemas, blood-letting, and a dietary regimen, as well as stress-relieving lifestyle practices like meditation and massage.

நமது பாரம்பரிய மருத்துவம் மற்றும் புத்துணர்ச்சி சிகிச்சைகளில் மூலிகைகள், நச்சுநீக்குதல், இரத்த சுத்திகரிப்பு மற்றும் உணவு முறைகள், தியானம் மற்றும் மசாஜ் போன்ற மன அழுத்தத்தைக் குறைக்கும் வாழ்க்கை நடைமுறைகள் ஆகியவை அடங்கும்.

ROCK CLIMBING

Rock climbing has become a most sought after sport in the world and Tamil Nadu offers rock climbers the perfect locations. Many rough terrains and mountainous paths in the state offer the best rock climbing experience for mountaineers.

மலையேற்றம் என்பது உலகில் மிகவும் விரும்பப்படும் விளையாட்டாக மாறியுள்ளது, மேலும் தமிழ்நாடு மலை ஏறுபவர்களுக்கு ஏதுவான இடங்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் உள்ள பல கரடுமுரடான நிலப்பரப்புகளும் மலைப்பாதைகளும் மலையேறுபவர்களுக்கு சிறந்த மலை ஏறும் அனுபவத்தை வழங்குகின்றன.

STORIES OF ADVANCED MANUFACTURING

ELECTRONICS

A wide range of multinational conglomerates have chosen Chennai as their South Asian manufacturing hub. Computers, mobile phones, equipment such as servers and printers make up the bulk of the electronics output of Tamil Nadu.

பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் சென்னையை தங்கள் தெற்காசிய உற்பத்தியின் மையமாகத் தேர்ந்தெடுத்துள்ளன. கணினிகள், அலைபேசிகள், கணிப்பொறி சர்வர்கள் மற்றும் பிரிண்டர்கள் போன்ற உபகரணங்கள் தமிழ்நாட்டின் மின்னணு உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கின்றன.

AUTOMOBILES

Tamil Nadu is a leader in the automobile industry, not only nationally, but also globally. It is a huge manufacturing hub for automobiles (cars, trucks), railway coaches, battle-tanks, tractors, motorbikes and heavy vehicles to ships.

ஆட்டோமொபைல் துறையில் தேசிய அளவில் மட்டுமல்லாமல், உலக அளவிலும் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. ஆட்டோமொபைல்கள் (கார்கள், டிரக்குகள்), ரயில் பெட்டிகள், போர் டாங்கிகள், டிராக்டர்கள், மோட்டார் பைக்குகள் மற்றும் கப்பல்களுக்கான கனரக வாகனங்கள் ஆகியவற்றிற்கான மிகப்பெரிய உற்பத்தி மையமாக அமைந்துள்ளது.

LEATHER

The leather industry is the oldest manufacturing industry in the country. Tamil Nadu hosts 60% of India's tanning capacity making it the forerunner in finished leather production. Ambur, Vellore are important centres amongst the major leather clusters.

இந்தியாவின் மொத்த தோல் பொருட்கள் உற்பத்தில், 60% பங்களிப்பினை வழங்கி தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. வேலூரில் உள்ள ஆம்பூர் தோல்பொருள் உற்பத்தி குழுமங்களின் முக்கிய இடமாக விளங்குகிறது.

TEXTILES

Tamil Nadu is one of the largest textile hotspots in the country. It is a significant player in spinning, handloom weaving, power loom weaving, processing, knitwear, apparel and garmenting. 4% of the National GDP is owed to the textile industry in Tamil Nadu.

நாட்டின் ஜவுளி உற்பத்தியில் தமிழ்நாடு முக்கிய இடமாக அமைந்துள்ளது. நூற்பு, நெசவு விசைத்தறி, செயலாக்கம், பின்னலாடை, துணி மற்றும் ஆடை உற்பத்தி போன்றவற்றில் பெரும்பங்கு வகிக்கிறது. மொத்த உள்நாட்டு ஜவுளி உற்பத்தியில் 4% பங்களிப்பினை தமிழ்நாடு அளிக்கிறது.



DEFENCE

Tamil Nadu is fast emerging as the defence and aerospace manufacturing hub. Tamil Nadu aims to position itself as a defence manufacturing destination, and is currently attracting large investments in the sector.

பாதுகாப்பு மற்றும் வான்வெளி உபகரணங்கள் உற்பத்தி மையமாக தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வருகிறது. பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி துறையில் முன்னணியில் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு தற்போது பெரிய முதலீடுகளை ஈர்த்து வருகிறது.

SUGAR

Sugar is an important agro-based industry and a direct employment provider in Tamil Nadu. Integrated sugar-industrial complexes in the state also engage in distillery and ethanol production, tissue culture, soil testing and bio-composting.

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலை தொழில் ஒரு முக்கிய விவசாயம் சார்ந்த தொழில் ஆகும். மேலும், நேரடி வேலை வாய்ப்பினையும் வழங்குகிறது. மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சர்க்கரை ஆலை வளாகங்கள், டிஸ்டில்லரி மற்றும் எத்தனால் உற்பத்தி, திசு வளர்ப்பு, மண் பரிசோதனை மற்றும் உயிர் உரம் உற்பத்தி ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளன.

PAPER

Paper is an other agro-based industry that has been operating in Tamil Nadu for many years. Tamil Nadu Newsprint and Papers Limited (TNPL) is an important public sector player in the paper industry, with its factory situated in Kagithapuram, Karur.

காகித தொழில், தமிழ் நாட்டில் பல ஆண்டுகளாக இயங்கி வரும் மற்றொரு விவசாயம் சார்ந்த தொழிலாகும். தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனம் (TNPL) காகிதத் துறையில் ஒரு முக்கிய பொதுத்துறை நிறுவனமாகும். இத்தொழிற்சாலை கரூரில் உள்ள காகிதபுரத்தில் அமைந்துள்ளது.

CEMENT

India is said to be one of the largest cement producers globally, and Tamil Nadu is home to an important cement cluster. Legacy industries like cement began to find their footing in the state following the end of the Second World War.

உலகளவில் இந்தியா மிகப்பெரிய சிமென்ட் உற்பத்தியாளர்களில் ஒன்றாக திகழ்கின்றது. மேலும், தமிழ்நாடு சிமென்ட் உற்பத்தியின் தாயகமாகும். இரண்டாம் உலகப் போரின் முடிவில் பெருமை வாய்ந்த தொழில்களுள் ஒன்றான சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்கள் மாநிலத்தில் காலூன்றத் தொடங்கின.

FIREWORKS

Sivakasi is a town that is almost synonymous with the Indian firework industry. It is said that Sivakasi alone caters to 90% of the national demand for fireworks. Over the past few years, the industry has adapted to manufacturing more eco friendly crackers.

இந்திய பட்டாசு தொழிலில் சிவகாசி நகரம் முக்கிய பங்களிக்கிறது. தேசிய பட்டாசு சந்தையின் 90% தேவையினை இந்நகரம் மட்டும் பூர்த்தி செய்கிறது. கடந்த சில ஆண்டுகளாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.